# அருகினில் நீ
# தொலைவினில் நான்




anbinmadal.org

Ag. அல்போன்ஸ்
திருச்சி

# அருகினில் நீ !
# தொலைவினில் நான் !

## அ.அல்போன்ஸ் - திருச்சி

நற்செய்திகளின் சாரம் என்பது மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையிலான அன்பு உறவின் வெளிப்பாடாகும். படைப்பிலிருந்து மீட்புவரை, பாவத்திலிருந்து முடிவில்லா வாழ்வு வரை மனித வரலாற்றை வழிநடத்தும் தெய்வீக திட்டமே விவிலியத்தின் மையச் செய்தி.

மனிதன் பாவத்தால் கடவுளிடமிருந்து பிரிந்தான். அவர் மனிதனை தேடி வந்து, அவனை மாற்றி, தன் விண்ணரசுக்கு அழைத்துச் செல்ல இயேசு இந்த உலகத்திற்கு வந்தார். அந்த அன்பின் உச்ச வெளிப்பாடாக இயேசு கிறிஸ்துவின் வாழ்வு, சிலுவை மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவை அமைந்துள்ளன.

இந்தக் கருத்தை அனைவரும் புரியும் வண்ணம் லூக்காஸ் தன் நற்செய்தியில், கல்வாரியில் இயேசுவுக்கும் நல்ல திருடனுக்கும் ஐந்து வரிகளில் நடந்த உரையாடல்களில் ஒட்டுமொத்த சுவிசேஷத்தின் சாரத்தை நமக்குத் தெளிவாக முழுமையாக ஒரு காட்சியில் இங்குச் சொல்லிவிடுகிறார்

கல்வாரி மனித வரலாற்றின் மிக ஆழ்ந்த தருணத்தைத் தாங்கிய இடமாக நிற்கிறது. அங்கே நடுவில் சிலுவையில் உயர்த்தப்பட்டிருந்தவர் இயேசு இருபுறமும் குற்றவாளிகள்; கீழே நின்று பார்த்த மக்கள்; பரிகாசம் செய்த வீரர்கள், துயரத்தில் நின்ற தாய் — இவை அனைத்தும் ஒரே மேடையில் இணைந்திருந்தன.

வெளிப்படையாகப் பார்த்தால் அது தோல்வியின் காட்சி: இரத்தம், வேதனை, இருள். ஆனால் உள்ளார்ந்த நிலையில் அது இரட்சிப்பின் உச்சி: நீதியும் இரக்கமும் சந்தித்த தருணம். மனிதன் பாவத்தால் கடவுளிடமிருந்து பிரிந்த கதை கல்வாரி உச்சிக்குச் சென்றது; அதே சமயம் கடவுள் மனிதனை மீண்டும் அணைத்துக் கொண்ட அன்பும் அங்கே வெளிப்பட்டது.

## 1. அருகினில் நீ தொலைவினில் நான்

கல்வாரி சிலுவையின் மேடையில் ஒரு அதிசயமான முரண்பாடு நின்றது அருகில் இயேசு; தொலைவில் திருடன். உடலால் அவர்கள் சில அடி தூரத்தில் இருந்தார்கள். ஒரே வேதனையில், ஒரே காற்றை சுவாசித்து, ஒரே மரணத்தின் நிழலில் தொங்கினார்கள். ஆனால் அந்த அருகாமை ஆன்மீக நெருக்கமாக இல்லை.

பாவத்தின் வழியில் நடந்தவன், சட்டத்தால் தண்டிக்கப்பட்டவன், சமூகத்தால் நிராகரிக்கப்பட்டவன் அவன் உள்ளம் தேவனிடமிருந்து தூரமாகிப் போயிருந்தது. ஆகவே, சிலுவையில் இயேசு அருகிலிருந்தாலும், திருடன் ஆன்மீகமாக மிகவும் தொலைவில் இருந்தான்.

அருகினில் நீ, தொலைவினில் நான். – இது திருடனின் நிலை

இந்தத் தொலைவு புவியியல் அல்ல; அது பாவத்தின் பிரிவு. ''உங்கள் அக்கிரமங்கள் உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் இடையே பிரிவை உண்டாக்கின'' (ஏசா 59:2) என்ற தீர்க்கதரிசனத்தின் நிறைவே இது.

இதுவே மனிதகுலத்தின் துயரம். தேவன் அருகில் இருக்கிறார்; ஆனால் மனிதன் உள்ளத்தில் தொலைவில் இருக்கிறான். இயேசு கேட்கச் சொல்கிறார், தட்ட சொல்கிறார், தேட சொல்கிறார்.

தொலைவில் இருந்த திருடன் எப்படி இயேசுவின் அருகில் அவருடன், அவரோடு இணைந்த காட்சியினை லூக்காஸின் வார்த்தைகளில் காண்போம்

## 2. சிலுவையில் கேட்கும் உரையாடல்கள்

சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவன், ''நீ மெசியாதானே! உன்னையும் எங்களையும் காப்பாற்று ''என்று அவரைப் பழித்துரைத்தான். ஆனால், மற்றவன் அவனைக் கடிந்து

கொண்டு, ''கடவுளுக்கு நீ அஞ்சுவதில்லையா? நீயும் அதே தீர்ப்புக்குத்தானே உள்ளாகி இருக்கிறாய். நாம் தண்டிக்கப்படுவது முறையே. நம் செயல்களுக்கு ஏற்றத் தண்டனையை நாம் பெறுகிறோம். இவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே!'' என்று பதிலுரைத்தான். பின்பு அவன், ''இயேசுவே, நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும்'' என்றான். அதற்கு இயேசு அவனிடம், ''நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்'' என்றார். (லூக்23:39-43)

இந்த இரு குரல்களின் சந்திப்பில்தான் சுவிசேஷத்தின் முழுச் சாரமும் அடங்கியுள்ளது. ஒரு பக்கம் பாவத்தை ஒப்புக்கொண்டு, தன்னை நினைவு கூறச்சொல்லும் மனிதக் குரல், மறுபக்கம் விண்ணக வாழ்வை அறிவிக்கும் இயேசுவின் குரல்.

## 3. திருடன் பேசிய வார்த்தைகள்

சிலுவையில் தொங்கியிருந்த நல்ல திருடன் சொன்ன வார்த்தைகள் மிகக் குறைவு; ஆனால் அவற்றின் ஆழம் அளவிட முடியாதது. அவன் பேசத் தொடங்கிய தருணம் ஒரு குற்றவாளியின் கடைசி சுவாசம் மட்டுமல்ல; அது மனந்திரும்பும் மனிதகுலத்தின் வாக்குமூலம்.

### 3. 1 "கடவுளுக்கு நீ அஞ்சுவதில்லையா?

இயேசுவை பழித்துரைத்த குற்றவாளி திருடனை பார்த்து நல்ல திருடனின் இந்தக் கேள்வி, ஞானத்தின் முதல் படியாகும். ''ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்;'' (நீதிமொழிகள் 1:7) என்று அறிவிக்கிறது. இங்கு 'அஞ்சுதல்' என்பது தண்டனையின் பயமல்ல; அது தேவனின் பரிசுத்தத்தையும் நீதியையும் உணரும் மரியாதைமிக்க விழிப்புணர்வு. ''நாம் தண்டிக்கப்படுவது முறையே. நம் செயல்களுக்கு ஏற்றத் தண்டனையை நாம் பெறுகிறோம்''. என்ற வார்த்தைகள் சிலுவையில் மரணத்தின் நிழலில் நின்றபோது, திருடன் தன் நிலையை மட்டும் அல்ல, தேவனின் நீதியையும் உணர்ந்தான். அந்த உணர்வே

அவனை மனந்திரும்பச் செய்தது. தன் பாவத்தை ஒப்புக்கொள்ளச் செய்தது. கிறிஸ்துவை நோக்கித் திரும்பச் செய்தது.

தேவபயம் இல்லாமல் மனந்திரும்புதல் இல்லை;

மனந்திரும்புதல் இல்லாமல் ஞானம் இல்லை.

ஆகவே ''கடவுளுக்கு நீ அஞ்சுவதில்லையா?'' என்ற கேள்வி, ஒரு கண்டிப்பு அல்ல; அது இரட்சிப்பிற்கான விழிப்பின் அழைப்பு. ஞானத்தின் கதவைத் திறக்கும் முதல் சாவி.

## 3.2 நல்ல திருடனுக்கு எப்படி இந்த உணர்வு வந்தது?

''தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில், தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை'' (லூக் 23:34) என்ற அந்த ஜெபம், குற்றவாளிகளின் நடுவே இருந்த இயேசு பகைவர்மேல் கொண்டிருந்த இரக்கத்தை வெளிப்படுத்தியது. அவன் காதுகள் ஒரு தெய்வீக குரலை அறிந்தன. அவன் அருகில் இருந்தவர் சாதாரண மரணதண்டனைக்குரியவர் அல்ல; மன்னிக்கும் இதயமுடைய மேய்ப்பர்.

உலகத்தால் நிராகரிக்கப்பட்டவன், சட்டத்தால் தண்டிக்கப்பட்டவன் திருடன் அந்தக் குரலைத் தெளிவாகக் கேட்டான். அவன் வாழ்க்கை முழுவதும் சாபங்களும் கோபங்களையும் கண்டிருப்பான்; ஆனால் இங்கு அவன் மன்னிப்பின் குரலைக் கேட்டான். அந்தக் குரல் அவன் மனச்சாட்சியை எழுப்பியது;; அதுவே அவன் உள்ளத்தை உருகச் செய்தது. சிலுவையில் ஒலித்த மன்னிப்பு, ஒரு குற்றவாளியை விசுவாசியாக மாற்றியது.

திசை தெரியாமல் தவறிச் சென்ற ஆடு. ஆயனை கண்டது. அந்தக் குரல் அவன் கண்களைத் திறந்தது.

நல்ல மேய்ப்பராகத் தன்னை வெளிப்படுத்தியவர் ''என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிசாய்க்கின்றன.''(யோவான்10:27) என்று அவர் கூறுகிறார் இந்த வசனம் நல்ல கள்ளனின் அனுபவத்தில் காணப்படுகிறது.

நாம் தண்டிக்கப்படுவது முறையே. என்ற அவன் ஒப்புதல், மனச்சாட்சியின் விழிப்பு. தன் குற்றத்தை நியாயப்படுத்தாமல், தண்டனையை ஏற்றுக்கொண்டு அவனது உள்ளத்தின் மாற்றத்தை வெளிப்படுத்துகிறது.

## 3.3 என்னை நினைவிற்கொள்ளும்

சிலுவையில் அறையுண்டவரை அரசராக அறிகிறான். ''இவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே'' (லூக் 23:41). என்று கூறுகிறான் வெளியில் தோல்விபோலத் தோன்றிய இயேசுவின் உள்ளார்ந்த அரசாட்சியை அவன் கண்டான். இயேசுவே, நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவுகூரும் என்று வேண்டினான். (லூக் 23:42)

. அதே சமயம் இயேசு அவமானத்திலும் வலியிலும் இருந்தார்; வெளிப்படையான மகிமை எதுவும் இல்லை. ஆனால் திருடன் சிலுவையின் பின்னால் மறைந்திருந்த அரச மகிமையை கண்டான். இது சாதாரண நம்பிக்கை அல்ல. இங்கு விசுவாசத்தின் ஆழம் இருக்கிறது

திருடனின் ''என்னை நினைவு கூரும்'' என்ற தாழ்மையான வேண்டுகோள். நற்செய்திகளில் பார்க்கின்றோம்

தாவீது ''ஆண்டவரே! நீர் உம்மக்கள்மீது இரக்கம் காட்டும்போது என்னை நினைவு கூரும்!'' (திபா. 106:4) என்று ஜெபிக்கிறார்.

மேலும் சிம்சோன் தன் இறுதி நேரத்தில், ஆண்டவரை நோக்கி, ''என் தலைவராகிய ஆண்டவரே! இந்த முறை மட்டும் என்னை நினைவுகூரும்'' (நீதித் தலைவர்கள் 16:28) என்று மன்றாடுகிறார்.

நெகேமியா, ''என் கடவுளே! இதன் பொருட்டு என்னைக் கண்ணோக்கும்'' (நெகேமியா: 13:14) என்று ஜெபிக்கிறார். தன் செயல்களின் பரிசாக அல்ல, கடவுளின் கவனத்தையும் அங்கீகாரத்தையும் தான் நாடுகிறார்.

மேலும் அன்னாள், ''ஆண்டவரே! நீர் உம் அடியாளாகிய என் துயரத்தைக் கண்ணோக்கி. என்னை மறவாமல் நினைவு கூர்ந்து எனக்கு

ஓர் ஆண் குழந்தையைத் தருவீர்'' (1 சாமுவேல்1:11) என்று மனவேதனையோடு ஜெபிக்கிறாள்.

துன்பத்தின் நடுவே நினைவுகூரப்பட வேண்டும் என்ற ஏக்கம் அனைவருக்கும் இருந்தது. நல்ல திருடனும் துன்பத்தின் உச்சியில் இருந்தபோது அரசில் நினைவுகூரப்பட வேண்டும் என்று கேட்டான்.

இத்துணை ஜெபங்களிலும் ஒரு பொதுவான உண்மை உள்ளது: தம்முடைய பலவீனத்தையும் குற்றத்தையும் உணர்ந்த மனிதன், தன் தகுதியை அல்ல, தேவனுடைய அருளையும் இரக்கத்தையும் தான் நாடுகிறான். நல்ல திருடன் செய்த விண்ணப்பமும் நம்பிக்கையுடன் வேண்டிய விசுவாசத்தின் குரல்.

## 4. மூன்று நிலைகள்.

இங்கே ஒரு விசேஷத்தைக் கவனிக்க வேண்டும்

மனித பரிமாணத்தின் மிருக நிலை, மனித நிலை, தெய்வீக நிலை, ஆகிய வளர்ச்சியை என்ற மூன்று நிலைகளாகப் புரிந்துகொள்ளலாம். சிலுவையில் நல்ல திருடனின் வார்த்தைகள், அவன் உள்ளத்தின் மூன்று நிலைகளை. பரிணாம வளர்ச்சியை வெளிப்படுத்துகின்றன. ஓவ்வொன்றாய் பார்ப்போம்.

### 4.1 முதல் நிலை

**மிருகநிலை:** இதில் மனிதன் உணர்ச்சிகளும் ஆசைகளும் வழிநடத்தும் வாழ்க்கையை வாழ்கிறான். சுயநலம், ஆசை, வன்முறை, கோபம், பழிவாங்கும் குணம், இவை இவனை ஆட்கொள்கின்றன. இது ''உயிர்வாழ்வதற்காக'' மட்டும் வாழும் நிலை. அறிவு இருந்தாலும், அது உயர்ந்த நோக்கைத் தேடாது; ஆதலால் அவன் வெளிப்படையாக மனிதன் என்றாலும், உள்ளார்ந்த நிலையில் அடிமைத்தனத்தில் இருக்கிறான். தன் தேவையை மட்டும் பார்ப்பது. அந்த நிலை அவனைச் சிலுவை தண்டனை பெற்ற குற்றவாளியாக்கியது

### 4.2 இரண்டாவது நிலை

**மனிதநிலை:** இங்கு மனச்சாட்சி விழிக்கிறது. நல்லது–கெட்டது என்ற வேறுபாட்டை உணர்கிறான். பொறுப்பு, அன்பு, கருணை, நீதி போன்ற பண்புகள் வளரத் தொடங்குகின்றன. இந்நிலையில் மனிதன் தன் குறைகளை உணர்ந்து திருந்த முயல்கிறான்.

''கடவுளுக்கு அஞ்சுவதும், நாம் தண்டிக்கப்படுவது முறையே என்ற அவன் வாக்குமூலம் மனிதனாக அவன் மீண்டும் பிறந்த தருணம். இது ஆன்மீகப் பயணத்தின் திருப்புமுனை.

இங்கு மனச்சாட்சி செயல்படுகிறது. இங்கு அவன் தன்னைத்தானே மீறி வாழ்க்கையின் உயர்ந்த அர்த்தத்தைக் தேட ஆரம்பிக்கிறான்.

## 4.3 மூன்றாவது நிலை தெய்வீகநிலை:

இங்கு மனிதன் தன் வாழ்வின் மையம் சுயநலமல்ல; அன்பு மற்றும் அருள் ஆகிறது. மன்னிப்பும் தியாகமும் இயல்பாக மாறுகின்றன. ''இயேசுவே, நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும்'' (லூக் 23:42) இங்கு அவன் நித்தியத்தை நோக்குகிறான்.

அவன் கண்கள் சிலுவை மரணத்தைத் தாண்டி ஒரு வாழ்வை பார்க்கின்றன.

இது தெய்வத்தை நோக்கித் திரும்பும் நிலை.

மிருகம் → மனிதன் → தெய்வ நோக்குடையவன்

இந்த மூன்று நிலைகளும் அவன் சொன்ன வார்த்தைகளில் தெரிகின்றன

இறைவனோடு இணைந்த உறவில் வாழ்கிறான். உயர்கிறான்; இங்கே அவன் மிருகத்திலிருந்து மனிதனாக, மனிதனிலிருந்து தெய்வீக அருளில் உயர்வது. இங்கே மனிதம் புனிதமானது.

# 5. இயேசுவின் பதில்

இயேசு அவனிடம், ''நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்'' என்றார். (லூக் 23:43)

இயேசு இந்த ஒற்றை வரியில் தான் வந்த நோக்கத்தின் செயலாற்றாலை தெள்ளத் தெளிவாகக் கூறுகின்றார்.

பேரின்ப வீட்டில் இருப்பீர் என்று சொன்னாலே போதும். இயேசுவின் அருளை ஆசிர்வாதத்தை புரிந்து கொள்வோம்.

பதிலை மறுபடி வாசிப்போம். **நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்** என **உறுதியாக உமக்குச் சொல்கிறேன்.** இன்று என்னோடு பேரின்பவீட்டில்.

**மூன்று வார்த்தைகள்**

திருடன் மூன்று நிலைகளில் உயர்ந்தபோது, இயேசு மூன்று வார்த்தைகளில் இரட்சிப்பை அளித்தார். சிலுவையில் தன் மரணத்தருவாயில் சொல்லிய பதிலில் வெளிப்பட்ட அந்த ஒரு ஒற்றை வரியில் இயேசுவின் அன்பின் ஆழம். இரட்சிப்பின் உறுதி, தாய்மையின் அரவணைப்பு அனைத்தும் ஒளிந்துள்ளன.

## 5.1 "இன்று"

இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர். (லூக் 43:21)

இயேசு ''ஒருநாள்'' என்று சொல்லவில்லை; **''இன்று''** என்றார்.

இது அன்பின் அவசரம். தெய்வீக அன்பு காத்திருக்காது;

மனந்திரும்பும் இதயத்தை உடனே அரவணைக்கும்

இது உடனடி அருள். அருளின் உச்சம்.

கடந்த காலப் பாவங்களை விசாரிக்காமல், எதிர்காலத் தீர்ப்பைக் காத்திருக்காமல், அந்த நொடியில் அருள் செயல்படுகிறது என்பதைக் காட்டுகிறது. இரக்கம் நிகழ்காலத்தில் செயல்படுகிறது.

இரட்சிப்பு ஒரு நாள்காட்டி நிகழ்வு அல்ல; அது இறைவன் மனிதனுடன் சந்திக்கும் உயிர்ப்புள்ள தருணம். **''இன்று''** என்பது இரக்கம் கதவைத் திறக்கும் நிமிடம். நல்ல திருடனின் வாழ்க்கையில் அந்த நொடி சிலுவையில் வந்தது.

இது சக்கேயுவின் வீட்டில் ஒலித்த ''**இன்று** இந்த வீட்டுக்கு மீட்பு வந்தது'' (லூக் 19:9) என்ற அறிவிப்பின் நாதம். மன்னிப்பு, தீர்ப்பு எல்லாம் நாளை வரை ஒத்திவைக்கப்படுவதில்லை; அது பாவியின் குரலைக் கேட்கும் நொடியில் தொடங்குகிறது. காலத்தின் தூரம் அழிக்கப்பட்டது.

அவன் கேட்ட கேள்வியை மீண்டும் வாசிப்போம் நீர் உமது ஆட்சியுரிமை ''வரும்போது'' என்னை நினைவுகூரும் என்கிறான். அதாவது இன்னும் சிறிது காலத்தில்... ''வரும்போது'' சில காலம் தேவைப்படுகிறது.
எதிர் காலத்தில், எதிர் நோக்கி எதிர் பார்ப்பில் அவன் நினைவுகூரும் என்கிறான்.
இயேசுவின் பதிலோ ''இன்றே''
விண்ணரசு என்பது எதிர்காலத்தில் மட்டுமே கிடைக்கும் பரலோக நிலை அல்ல; அது இயேசுவின் சன்னிதியில் நிகழ்கால அனுபவமாகியது.

## 5.2. "என்னுடன்"

இந்த ஒரு சொல், இயேசுவின் இரக்கத்தை வெளிப்படுத்துகிறது. சிலுவையில் நல்ல திருடனிடம் இயேசு **பேரின்ப வீடு** என்ற இடம் கொடுப்பதற்கு முன் **உறவு** கொடுக்கப்படுகிறது.

''என்னுடன்'' — இது விண்ணரசின் பரிசு அல்ல; உறவின் பரிசு. விண்ணரசு ஒரு இடம் என்றால், ''என்னுடன்'' என்பது நெருக்கத்தின் உச்சம். உடலால் அருகில் இருந்தாலும், இதயத்தில் தொலைவில் இருந்தவன், இப்போது உறவால் மிக அருகில் கொண்டுவரப்பட்டான். இறைவனின் இரட்சிப்பு என்பது இடமாற்றம் அல்ல; உறவுமாற்றம்.
இங்கே விண்ணரசுவில் இடம் கிடைத்ததை பற்றி நாம் மகிழ்கின்றோம் ஆனால் அதைவிட மிகப் பெரிய சந்தோஷம் அவனுக்குக் கிடைத்தது
ஆம். அது அவன் இயேசுவோடு, கிறிஸ்துவோடு இருக்கின்ற அந்த நிலை யாருக்கும் கிடைக்காத பாக்கியம். விண்ணரசைவிட மேலான ஆனந்தம்.
நற்செய்திகள் முழுவதும் ஒரு உண்மை வெளிப்படுகிறது:
அற்புதம் முக்கியமல்ல;
ஆசீர்வாதம் முக்கியமல்ல;
விண்ணரசு முக்கியமல்ல;
அவரோடு இருப்பதே முடிவில்லா வாழ்வு.
இயேசுவுடன் ஒன்றித்து வாழ்வது, கிறிஸ்துவுக்குள் நான் எனக்குள் கிறிஸ்து அதாவது இங்கே ''இடத்தைவிட உறவு மேலானது'' என்பதை காட்டும் பல சம்பவங்கள் விவிலியத்தில் உள்ளன.

## 5.3 இயேசு நம்மோடு.

ஆண்டவர் உம்மோடு இருக்கிறார் என்ற வார்த்தை விவிலியம் முழுவதும் ஒலிக்கும் வாக்குறுதியாகும்.

''நான் உம்மோடு இருப்பேன்.'' (விடுதலைப் பயணம் 3:12) மோசேயிடம் கடவுள் கூறுகிறார்: இது உடன்படிக்கையின் உறுதிமொழி.

அவள் 'இம்மானுவேல்' என்று பெயரிடுவார்''. (எசா 7:14) ''இம்மானுவேல்'' தேவன் நம்மோடு என்ற நம்பிக்கையை நினைவுபடுத்துகிறது.

லூக்காஸ்(1:37) முதல் அதிகாரத்தில் வானதூதர் மரியாளிடம் கூறிய ஆண்டவர் **உம்மோடு** இருக்கிறார். என்ற முக்கியமான வார்த்தையைக் கடைசி அதிகாரத்திலும் சிலுவையில் இயேசு மீண்டும் நல்ல கள்ளனிடம் **"என்னுடன்"** பேரின்ப வீட்டில் இருப்பீர் என்று கூறுகிறார் (லூக்காஸ்23:43)

இயேசு பன்னிருவரைத் தேர்ந்தெடுத்ததன் முதல் காரணம்:

''அவர்கள் தம்மோடு இருக்கவும்'' (மாற் 3:14) அவர்களை உடனே பிரசங்கிக்க அனுப்பவில்லை; முதலில் அவரோடு இருப்பதற்கே அழைத்தார். இது தெளிவாகச் சொல்கிறது: சேவை செய்வதற்கு முன், உறவு முக்கியம்.

## 5.4. மரியாள் – மார்த்தா சம்பவம்

மார்த்தா வேலைகளில் கவலைப்பட்டாள்; ஆனால் மரியாள் இயேசுவின் காலடியில் உட்கார்ந்தாள். இயேசு சொன்னார்: ''மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக்கொண்டாள்; அது அவளிடமிருந்து எடுக்கப்படாது'' என்றார். (லூக் 10:42) இங்கு நல்ல பங்கு என்பது வேலை அல்ல; அவரோடு இருப்பதே. இடம் முக்கியமல்ல; அவரின் சந்நிதி முக்கியம்.

சீடர்களிடம் ''நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள்'' (யோவான் 14:3) என்று இயேசு சொல்கிறார்: ''இங்கு விண்ணரசைப் பற்றிய வாக்குறுதி இருக்கிறது. அதில் முக்கியம் அவரோடு இருப்பது.

## 5.5. பேரின்ப வீட்டில்

இந்த வார்த்தை நித்திய நம்பிக்கையின் வாசலைத் திறக்கிறது. பேரின்ப வீட்டில் இருப்பாய். என்ற வாக்கியம், மரணத்தின் முடிவை அல்ல, மகிமையின் தொடக்கத்தை அறிவிக்கிறது. ஆதாம் இழந்த ஏதேன் தோட்டம் மீண்டும் திறக்கப்படுகிறது. வெளியேற்றப்பட்ட மனிதகுலத்தின் சார்பாக ஒரு திருடன் மீண்டும் உள்ளே அழைக்கப்படுகிறான். இது இட மாற்றம் மட்டுமல்ல; நிலை மாற்றம் தண்டனையிலிருந்து சமாதானத்திற்கு, வெட்கத்திலிருந்து மகிமைக்கு, மரண நிழலிலிருந்து நித்திய ஒளிக்கு.

ஆகவே ''பேரின்ப வீட்டில்'' என்பது ஒரு எதிர்கால இடத்தின் பெயர் மட்டும் அல்ல; இறைவனுடன் நிரந்தர சமுகத்தில் வாழும் மீட்பின் நிறைவு

## 5.6. உறுதி மொழி

இயேசு ''நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என **உறுதியாக** உமக்குச் சொல்கிறேன்'' என்றார்

இயேசு முதலில்

''இன்றே'' காத்திருக்கச் சொல்லாத கருணை,

''என்னுடன்'' இது அன்பின் அரவணைப்பு

''பேரின்ப வீடு''. முடிவில்லா வாழ்வு

இவையெல்லாம் ஒரு வாக்குறுதி அல்ல; உறுதியான தீர்ப்பு. ''நீ பேரின்ப வீட்டில் இருப்பாய்'' என்று **உறுதியாக உமக்குச் சொல்கிறேன்**''. என்றார். வார்த்தையில் உள்ள ''உறுதியாக'' என்பது சாதாரண வாக்குறுதி அல்ல; அது தெய்வீக அதிகாரத்துடன் வழங்கப்பட்ட அறிவிப்பு.

நல்ல திருடன் எந்தச் சடங்கும் செய்யவில்லை; எந்தச் செயலாலும் தன்னை நிரூபிக்கவில்லை; அவன் பெற்றது உறுதியான, முழுமையான வாழ்வு.

மனிதன் தன் வாழ்க்கையை வீணாக்கியிருந்தாலும், மனந்திரும்பிய இதயத்திற்கு இயேசு ''நீ தண்டிக்கப்படுவாய்'' என்று சொல்லவில்லை. குற்றவாளி மரணத்தின் நிழலில் இருந்தவன் முடிவில்லா வாழ்விற்கு அழைக்கப்பட்டான். இது ஒரு மனிதனின் கதை அல்ல — மனிதகுலத்தின் மீட்பின் வடிவம்.

திருடன்:
காயீனைப் போல விழுந்தான்.
தாவீதுபோல் ஒப்புக்கொண்டான்.
ஆபிரகாமைப் போல நம்பினான்.
முடிவில்லா வாழ்வு  பெற்றான்.

## 6.இயேசுவின் தாயுள்ளம்

''நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்'' என்றார். (லூக் 23:43)

இயேசு கூறிய மூன்று வார்த்தைகளிலும் தாய்மையின் குரல் ஒலிக்கிறது
ஒரு தாய் தன் குழந்தை அழைக்கும்போது நாளை வரமாட்டாள்; உடனே ஓடிவருவாள். அதுபோல, சிலுவையில் இயேசு எதிர்கால தீர்ப்பைச் சொல்லவில்லை; நிகழ்கால இரட்சிப்பை அறிவித்தார்  தாய் தன் தவறிழைத்த பிள்ளையைத் தள்ளிவிடாமல், குற்றத்தை மன்னித்து ஏற்றுக்கொள்வது போல, இயேசு அவன் கடந்தகாலத்தை ஆராயவில்லை; அவன் இன்றைய மனந்திரும்புதலை மட்டும் பார்த்தார்.;

''இன்றே'' என்பதில் தாயின் அவசர அன்பு ஒலிக்கிறது உடனே அள்ளி அணைத்துக்கொள்ளும் தாய் மடி

''என்னோடு'' என்ற வார்த்தையைக் கொஞ்சம் பார்ப்போம்

தாய் குழந்தையைத் தன் அருகில் வைத்துக் கொள்ள விரும்புவாள்; அதுபோல் இயேசு ''என்னுடன்'' என்று சொல்கிறார். சிலுவை மரம் தண்டனையின் இடமாக இருந்தாலும், அந்த நொடியில் அது தாய்மையின் அரவணைப்பாக மாறியது

குற்றவாளியாக வந்தவன், இயேசுவின் அருளால் அவரோடு (என்னோடு) ஏற்றுக்கொள்ளப்பட்டான். இதுவே சிலுவையில் வெளிப்பட்ட இயேசுவின் தாய்மை. அன்பின் ஆழம்.

## 7.தாய்மையின் குரல்

இயேசுவின் தாய்மையை விளக்கும் காட்சிகளை விவிலிய பக்கங்களில் பார்ப்போம்

ஊதாரி மகன் உவமையில். மனம் திருந்தி அவன் தொலைவில் வந்துகொண்டிருந்தபோதே அவன் தந்தை அவரைக் கண்டு, பரிவு கொண்டு, ஓடிப்போய் அவரைக் கட்டித் தழுவி முத்தமிட்டார். (லூக் 15: 20) அப்படிப்பட்ட தாயன்பை சிலுவையில் பார்க்கிறோம்

''நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன்.'' (யோவான் 14:18) என்ற வாக்குறுதியின் நிறைவே இது.

பேரின்ப வீட்டில் இருப்பீர் என்ற வார்த்தை, பாதுகாப்பும் நிரந்தர சமாதானமும் உள்ள இல்லத்திற்குள் அழைப்பு.

தாயின் மடியில் கிடைக்கும் பாதுகாப்பு, நிம்மதி, சொந்தத்துவம் ஆகியவை அந்த ஒரு வார்த்தையில் அடங்கியுள்ளன. சிலுவையின் வேதனையிலும் கூட, தெய்வீக தாய்மையின் இதயம் வெளிப்பட்டது:

''கோழி தன் குஞ்சுகளைத் தன் இறக்கைக்குள் கூட்டிச் சேர்ப்பதுபோல நானும் உன் மக்களை அரவணைத்துக்கொள்ள எத்தனையோ முறை விரும்பினேன்'' (மத் 23:37) என்ற வார்த்தைகள் இயேசுவின் தாய்மையுள்ள இரக்க இதயத்தை வெளிப்படுத்துகின்றன.

''பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். (மத் 11:28) இங்கே இயேசு தன்னை ஓய்வளிக்கும் இடமாக வெளிப்படுத்துகிறார். இது தாயின் மடியைப் போன்ற அழைப்பு. சுமையுடன் வரும் ஒருவரையும் தள்ளாமல், அருகில் வர அழைக்கிறார்.

''சிறு பிள்ளைகளை என்னிடத்தில் வர விடுங்கள்'' (மாற்கு10:14). குழந்தைகளைத் தழுவி ஆசீர்வதித்த இந்தச் சம்பவம், பாதுகாப்பும் அன்பும் நிறைந்த இதயத்தைக் காட்டுகிறது. குழந்தை மனதோடு வருபவர்களை இயேசு தன்னருகே சேர்த்துக்கொள்கிறார்.

## 8. சிலுவையில் தாய்மையின் முழுமை.

இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம், ''அம்மா, இவரே உம் மகன்'' என்றார். சிலுவையில் இயேசு தம் தாயை சீடரிடம் ஒப்படைத்தார் (யோவான் 19:26-27). அந்தத் தருணமும் தாய்மையின் பரிமாணத்தைக் காட்டுகிறது — பராமரிப்பு, உறவு,

பாதுகாப்பு. சிலுவையில் வேதனையிலும் கூட அவர் உறவுகளை உறுதிப்படுத்தினார்.

## 9. நல்ல கள்ளன் யார்

இவன் வழிதவறிய ஆடு. தன் தவறை உணர்ந்த தருணம், மேய்ப்பர் தன் தோளில் சுமப்பதைப் பார்க்கிறோம்.
திருந்தி வந்த ஊதாரி மகன்
கடைசியானோர் முதன்மையாவார்கள்; முதன்மையானோர் கடைசியாவார்கள்'' (மத்தேயு 20:16) என்ற நற்செய்தி வார்த்தையில், இவன் கடைசியானோரில் முதன்மையானவன்.
திராட்சைத்தோட்டத் தொழிலாளிகளில் கடைசி மணிநேரத்தில் வந்து முழு கூலியைப் பெற்றவன்.
உயிருள்ள நீரை உண்மையாகப் பருகினான்.
நீராக மாறிய திராட்சை ரசத்தை, கிறிஸ்துவின் இரட்சிப்பைச் சுவைத்தவன் விண்ணரசின் பந்தியில் அமர்வோரில் ஒருவனாகிறான்.
''இதோ, நான் கதவு அருகில் நின்று தட்டிக்கொண்டிருக்கிறேன். யாராவது எனது குரலைக் கேட்டுக் கதவைத் திறந்தால், நான் உள்ளே சென்று அவர்களோடு உணவு அருந்துவேன்.'' (திருவெளி3:20) . இவன் குரலைக் கேட்டுக் கதவைத் தட்டி, இயேசுவுடன் உணவு அருந்தியவன்.
ஏசுவின் உமிழ்நீர் சேற்றால் கண்களில் பார்வைபெற்ற குருடன் சொல்கிறான் ''நான் பார்வையற்றவனாய் இருந்தேன்; இப்போது பார்வை பெற்றுள்ளேன்''(யோவான்9:25)
நல்ல கள்ளனுக்கும் அது பொருந்தும்

## 10. அருகில் மிக அருகில்

சிலுவை மேல் நடந்த நிகழ்வு ஒரு மனிதரின் மனந்திரும்புதலையும், தேவனின் அன்பின் வெளிப்பாட்டையும் ஒரே நேரத்தில் காட்டுகிறது

**திருடன்:**

மிருக இயல்பிலிருந்து மனித உணர்வுக்கு
மனித உணர்விலிருந்து தெய்வத்தை நோக்கி

**இயேசு:**

ஒரு பாவியின் மூன்று நிலை உயர்வுக்கு,
ஒரு இரட்சகரின் மூன்று வார்த்தைகள் பதிலானது
**இன்று –** என்னுடன் – பேரின்ப வீடு.
திருடன் தனது வார்த்தைகளில் மனித பரிணாமத்தை காட்டினான்.
இயேசு தனது வார்த்தைகளில் தெய்வ கிருபையை வெளிப்படுத்தினார்.

அருகினில் நீ. தொலைவினில் நான் என்ற நிலை மாறித் தூரம் குறைந்து வெகு அருகில் இணைந்தனர்.
கிறிஸ்து நம் அருகில் உள்ளத்தின் ஆழத்தில் உயிராய் தங்கியிருப்பவர் அதை அறியாமல் மனிதன் பல நேரங்களில் பயத்தால், பாவத்தால், சந்தேகத்தால், குற்ற உணர்ச்சியால் உணர்விலும் விசுவாசத்திலும் தன்னைத் தானே தூரப்படுத்திக் கொள்கிறான். மனிதன் தொலைந்த போதிலும் கிறிஸ்து ஒருபோதும் தூரப்படவில்லை என்பது நற்செய்தியின் நம்பிக்கை.
தேவனின் அருகாமை நிலையானது; மனிதனின் தூரம் மாறுபடுகிறது. இந்த இடைவெளி தான் மீட்சியின் வரலாற்றை உருவாக்கியது.